# <u>வந்தே மாதரம்</u>

*வந்தே மாதரம் என்போம் - எங்கள்*
*மாநிலத் தாயை வணங்குதும் என்போம்*

*ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்*
*ஜன்மமித் தேசத்தில் எய்தின ராயின்*
*வேதிய ரயினும் ஒன்றே - அன்றி*
*வேறு குலத்தின ராயினும் ஒன்றே*
*ஈனப் பறையர்க ளேனும் - அவர்*
*எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவர் அன்றோ?*

*சீனத்த ராய்விடு வாரோ? - பிற*
*தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ?*
*ஆயிரம் உண்டிங்கு ஜாதி- எனில்*
*அன்னியர் வந்து புகலென்ன நீதி? ஓர்*
*தாயின் வயிற்றில் பிறந்தோர் - தம்முள்*
*சண்டைசெய் தாலும் சகோதரர் அன்றோ?*

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே -  நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் -  இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?
எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்

முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்
புல்லடி மைத்தொழில் பேணிப் - பண்டு
போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர -  இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி

-பாரதியார்